<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 171/2022

அரசுதரப்பு 1 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தென் எழிலன் | வயது | : | 40 |
| தந்தை/கணவர் பெயர் | : | மகாராஜன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 24.02.2026ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது வேப்பூர் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியில் இருந்து வருகிறேன். நான் மங்கலம்பேட்டை காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்த போது 10.12.2018 ந் தேதி அதிகாலை 06.45 மணிக்கு நானும் என்னுடன் பணிபுரியும் 631 ராஜதுரை என்பவரும் மங்கலம்பேட்டை உதவி ஆய்வாளராகிய தங்களுக்கு உதவியாக தொட்டிக்குப்பம் சுடுகாடு அருகில் குற்ற நடத்தை காரர்களை கண்காணிக்கும் போது அங்கு வந்த இரட்டை மாட்டு டயர் வண்டியை தாங்கள் நிறுத்தி தணிக்கை செய்தபோது மேற்படி வண்டியில் சுமார் 1/2 யூனிட் ஆற்று மணல் இருந்தது. மேற்படி வண்டியை ஓட்டி வந்தவரை பற்றி தாங்கள் விசாரிக்க அவரது பெயர் ராஜீவ்காந்தி (28) த/பெ. ராஜேந்திரன் மெயின் ரோடு M.பட்டி விருத்தாசலம் தாலுக்கா என்றும்

மணிமுத்தாற்றில் மணல் ஏற்றிவர எந்தவிதமான அரசு அனுமதியோ உரிமமோ பெறாமல் தன் சுய லாபம் கருதி விற்பனைக்காக திருடி வந்துள்ளார் என்றும் தெரியவந்ததால் கைதுக்கான காரணம் கூறி 07.00 மணிக்கு உதவி ஆய்வாளர் கைது செய்யதார். அந்த நேரத்தில் அந்த இடத்தில் அந்நிய சாட்சிகள் யாரும் முன்வராததால் எங்கள் முன்னிலையில் போலிஸ் மகசரில் 07.15 மணிக்கு டயர்வண்டியும் 1/2 யூனிட் ஆற்றுமணலையும் கைப்பற்றினார். தற்போது என்னிடம் காட்டப்படும கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.1** ஆகும். வழக்கு சொத்து எதிரி திரும்ப இடைக்காலப்பொருப்பில் பெற்று சென்றதை விற்றுவிட்டதாக எதிரி கூறினார். பின் எதிரி மற்றும் தடையம் சகிதம் 08.00 மணிக்கு நிலையம் வந்து எதிரியை நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தி எதிரியின் மீது 265/18 U/S 21(1) MINES & MINARAL ACT & 379, 430 IPC ன் படி வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தோம். விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை.

<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 171/2022

அரசுதரப்பு 2 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜதுரை | வயது | : | 38 |
| தந்தை/கணவர் பெயர் | : | அஞ்சாபுலி | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 24.02.2026ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது திட்டக்குடி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்து வருகிறேன். நான் மங்கலம்பேட்டை காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்த போது 10.12.2018 ந் தேதி அதிகாலை 06.45 மணிக்கு நானும் என்னுடன் அ.சா.1 மற்றும் உதவி ஆய்வாளராகிய தங்களுக்கு உதவியாக தொட்டிக்குப்பம் சுடுகாடு அருகில் குற்ற நடத்தை காரர்களை கண்காணிக்கும் போது அங்கு வந்த இரட்டை மாட்டு டயர் வண்டியை தாங்கள் நிறுத்தி தணிக்கை செய்தபோது மேற்படி வண்டியில் சுமார் 1/2 யூனிட் ஆற்று மணல் இருந்தது. மேற்படி வண்டியை ஓட்டி வந்தவரை பற்றி தாங்கள் விசாரிக்க அவரது பெயர் ராஜீவ்காந்தி (28) த/பெ. ராஜேந்திரன் மெயின் ரோடு M.பட்டி விருத்தாசலம் தாலுக்கா என்றும் மணிமுத்தாற்றில் மணல் ஏற்றிவர

எந்தவிதமான அரசு அனுமதியோ உரிமமோ பெறாமல் தன் சுய லாபம் கருதி விற்பனைக்காக திருடி வந்துள்ளார் என்றும் தெரியவந்ததால் கைதுக்கான காரணம் கூறி 07.00 மணிக்கு உதவி ஆய்வாளர் கைது செய்தார். அந்த நேரத்தில் அந்த இடத்தில் அந்நிய சாட்சிகள் யாரும் முன்வராததால் எங்கள் முன்னிலையில் போலிஸ் மகசரில் 07.15 மணிக்கு டயர்வண்டியும் 1/2 யூனிட் ஆற்றுமணலையும் கைப்பற்றினார். தற்போது என்னிடம் காட்டப்படும கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2ஆவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். வழக்கு சொத்து எதிரி திரும்ப இடைக்காலப்பொருப்பில் பெற்று சென்றதை விற்றுவிட்டதாக எதிரி கூறினார். பின் எதிரி மற்றும் தடையம் சகிதம் 08.00 மணிக்கு நிலையம் வந்து எதிரியை நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தி எதிரியின் மீது 265/18 U/S 21(1) MINES & MINARAL ACT & 379, 430 IPC ன் படி வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தோம். விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை